செ.வெ.எண்:17/அக்டோபர்/2018 நாள்:04.10.2018

**பத்திரிக்கை செய்தி**

**அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், மத்திய சிறை, திருச்சிராப்பள்ளியில் வேலை வாய்ப்பு**

திருச்சிராப்பள்ளி மத்திய சிறையில் இயங்குகின்ற, அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில், காலியாக உள்ள ஒரு பணிமனை உதவியாளர் பணியிடத்திற்கு ITI தையல்தொழில்நுட்ப பிரிவில் NCVT (Certificate) சான்றிதழ் பெற்றவர்கள், 01.07.2018 அன்றைய தேதிப்படி, அரசு விதிகளின்படி வயது வரம்பு (SC/ST-35, BC/MBC-32, OC-30, PH-40) உள்ளவர்களைக் கொண்டு, 1. பொதுப்போட்டி (முன்னுரிமை பெற்றவர்)(General Turn (Priority)) - என்ற இன சுழற்சி அடிப்படையில் பூர்த்தி செய்யப்பட உள்ளது. ஊதிய விகிதம் Level of Pay 5, Rs.18,200 - 57,900. எனவே, தகுதியானவர்கள் **முதல்வர், அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், மத்திய சிறை, திருச்சி-620 020** என்ற முகவரிக்கு உரிய கல்விச் சான்றிதழ்கள், முன்னுரிமை சான்றிதழ் மற்றும் ஆளறி சான்றிதழ் ஆகியவற்றின் நகல்களுடன், பாஸ்போர்ட் சைஸ் புகைப்படத்துடன் 20.10.2018-க்குள் விண்ணப்பம் செய்யலாம் என முதல்வர், அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், மத்திய சிறை, திருச்சி அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

மேலும் விபரங்களுக்கு 0431-2332725 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**